THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, the 4th September 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Mat Industry

* 20 † *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ஈச்சம் பாய், கோரைப் பாய் நெசவுத் தொழிலானது எந்தெந்த ஜில்லாக்களிலே, எந்தெந்த இடங்களிலே நடைபெற்று வருகின்றது ?

(ஆ) இத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கத்தாரால் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A note[a] furnishing the information required is placed on the table of the House.

SRI P. G. MANICKAM : நூற்றுக்கு மேற்பட்ட கிராமங்களில் இந்தத் தொழில் நடைபெறுகின்றன. ஆனால் 23 கிராமங்களில் மட்டுமே கோவாப்பரேடிவ் சொஸைட்டிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மற்ற கிராமங்களிலும் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகள் ஏற்படுத்தி இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்ய சர்க்கார் என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மேற்படி நல்ல கைத் தொழில்களை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் மேலும் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது.

Eradication of corruption

* 26 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) லஞ்ச ஊழலை ஒழிக்க மாவட்டவாரியாக கமிட்டி அமைக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) இது சம்பந்தமாக மத்திய சர்க்காரிடமிருந்து அறிக்கை ஏதாவது வந்ததா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) No, Sir.

SRI S. M. ANNAMALAI : இந்த லஞ்ச ஊழல் எங்கு பார்த்தாலும் பெருத்துவிட்டது. சிறிய ஆபீஸ் முதல் பெரிய ஆபீஸ்கள் வரையில் லஞ்சம் வாங்கிக்கொண்டு சில மனுக்களை கிழித்து எறிந்து விடுகிறார்கள்.

---

† Postponed from the list of questions for 3rd September 1958.

a Printed as Appendix I on pages 211–214 infra.

[4th September 1958

லஞ்ச ஊழலை ஒழிக்க சில மாகாணங்களில் ஜில்லாவாரியாக கமிட்டிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதேபோன்று இங்கும் ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: எல்லாப் பக்கமும் லஞ்சம் பரவலாக இருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்ள தயாராகயில்லை. ஆனால் லஞ்சம் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். கமிட்டிகள் போட்டு தீர்ப்பதாயிருந்தால் வெகு காலத்திற்கு முன்பே அதை தீர்த்திருக்கலாம். அதிகாரிகள் மட்டுமில்லாது பொது மக்களும் பூர்வமாக ஒத்துழைப்பதின் மூலந்தான் லஞ்ச ஊழலை ஒழிக்க முடியும்.

SRI M. C. MUTHUKUMARASWAMY: இந்த லஞ்ச ஊழல்கள் ஏற்படுவதற்கான மூல காரணங்கள்தான் என்ன? அவற்றைப் போக்குவதற்கு அரசாங்கம் என்ன தீவிர நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இதற்காக 1947-ம் ஆண்டில் பிரதம நீதிபதி ராஜமன்னார் அவர்களின் தலைமையின்கீழ் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு அந்தக் கமிட்டி பல சிபார்சுகளைச் செய்திருக்கிறது. அதன் அடிப்படையில் இப்போது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இதில் முக்கியமாக கவனிக்கவேண்டியது: பொது மக்களும் இதில் நல்ல முறையில் ஒத்துழைத்து, அவர்கள் தங்கள் சுயநலத்திற்காக அதிகாரிகளிடம் லஞ்சம் கொடுத்து தங்கள் காரியங்களைச் செய்து கொள்ள முயற்சி செய்யாமல் தங்களுக்கு தாங்களே ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதுடன், லஞ்ச ஊழல்கள் வரும்போது எந்த விதமான பாரபட்சமும் இல்லாமல் அவர்கள் வந்து சாட்சி சொல்ல தயாராயிருக்கவேண்டும். பல சமயங்களில் லஞ்ச ஊழல் புகார்கள் வந்து அவைகள் விசாரிக்கப்படும்போது எந்த விதமான சாட்சியமும் இல்லாமல் அந்த விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்ய ஏதுவாயிருக்கிறது. பொதுமக்கள் சாட்சியம் சொல்ல முன் வருவதில்லை. ஆகவே, பொதுமக்களின் பூர்ண ஒத்துழைப்பு இருந்தால் இந்த லஞ்ச ஊழலை போக்கமுடியும்.

SRI V. K. KOTHANDARAMAN: லஞ்ச ஊழல்கள் அதிகமாக இருப்பதாக பல சந்தர்ப்பங்களில் அமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டிருந்தும்கூட, அதைப் போக்குவதற்கு அரசாங்கம் மட்டிலும் செய்ய முடியாது, பொது மக்களின் ஆதரவும் வேண்டுமென்று கோரக்கூடிய இந்த சமயத்தில் பொது மக்களின் ஆதரவு வேண்டுமென்றிருந்தாலும் அதற்கு வேண்டிய காரியங்களைப்பற்றி பரிசீலனை செய்ய ஜில்லாவிற்கு ஒரு கமிட்டி அல்லது மாகாணத்திற்கு ஒரு கமிட்டி என்று ஏற்படுத்தி பரிசீலனை செய்ய ஒரு கமிட்டி ஏற்படுத்த சர்க்கார் முன்வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: கமிட்டி ஏற்படுத்துவதினால் எந்தவிதமான பலனும் வந்துவிடாது.

SRI T. T. DANIEL: May I know from the Hon. Minister, Sir, whether our Government have not appointed officers to detect cases of bribery and corruption, and are not in our State already several cases taken up and the offenders booked and convicted?

THE HON. SRI C. SUBRAMANIAM: The Hon. Member is correct. We have got a regular machinery for the purpose of finding out corruption and bringing the offenders concerned to book.

Seed farms

* 27 *Q.*—SRI K. RAMACHANDRAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to start seed farms in the Ramanathapuram district; and

(*b*) if so, the number of such farms and their location?